# ஆதிசுன்சுனாகிரி காலபைரவர் ஆலயம்

**சாந்திப்பிரியா**

பெங்களூர் நகரில் இருந்து 105 கல் தொலைவில் உள்ள மண்டியா என்ற மாவட்டத்தில் நாகமங்கலா தாலுக்காவில் அமைந்துள்ளது ஸ்ரீ அருணாசலகிரி மகா சமஸ்தான மடம் . இந்த மடம் உள்ள இடம் பண்டைய காலத்தில் இருந்தே மத வழிபாட்டுத் தலமாக இருந்து வந்துள்ளது. தர்மபீடம் என்ற இந்த இடம் ஆதி காலத்திலேயே இந்தியக் கலாச்சாரங்களை பேணிக் காக்கும் இடமாக இருந்துள்ளது இந்த மடம். இதன் முக்கியக் குறிகோள் உலக மக்களிடையே சகோதரத்துவத்தை ஏற்படுத்தி, ஆன்மீக மார்கத்தைப் பரப்புவதே ஆகும்.

இந்த மடத்தின் குரு பரம்பரையில் வந்துள்ள ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாலகங்காதர மகா ஸ்வாமிகள் ஸ்ரீ ஆதிசுன்சுனாகிரியின் 71 வது பீடாதிபதியாக 1974 ஆம் ஆண்டு தம்முடைய 30வது வயதில் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பல்லாயிக்கணக்கானவர்கள் இவரிடம் வந்து ஆன்மீகம் மற்றும் பொது வாழ்விற்கான அறிவுறைகளை பெற்றுச் செல்கின்றனர். ஆன்மீக போதனைகளைத் தவிற ஸ்வாமிகள் கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி மற்றும் நோயற்ற வாழ்க்கை இரண்டிலும் அதிக கவனம் செலுத்துகின்றார். அந்த பீடாதிபதி அமைத்துள்ளதே ஆதிசுன்சுனாகிரி காலபைரவர் என்ற அற்புதமான ஆலயம்.

ஸ்ரீ ஷேத்திர ஆதிசுன்சனாகிரி புனிதத் தன்மை வாய்ந்த இடம். தெய்வீக அலை பாய்ந்தோடும் இடம் அது. அங்கு பண்டைய வேத வழிமுறையின் அடிப்படையில் இயற்கையை இறைவனாகப் போற்றி உலக அமைதிக்கென யாகங்களும் பிரார்தனைகளும் நடைபெற்று வருகின்றன. ஆதிசுன்சுனாகிரி காலபைரவர் ஆலயம் பெங்களூரின் அருகில் உள்ள மாண்டியாவில் இருந்து சுமார் 66 கி.மீ தொலைவில் உள்ள பெல்லூரில் உள்ளது. அந்த இடம் சிவபெருமானுக்கு உகந்த இடம். சிவபெருமான் ஸ்ரீ ஷேத்திரத்தில் தவத்தில் இருந்த பொழுது அந்த இடத்தில் அனைவரையும் துன்புறுத்திக் கொண்டு இருந்த சுன்சா மற்றும் குன்சா என்ற இரண்டு அசுரர்களை வதம் செய்தார். சிவபெருமான் தவத்தில் அமர்ந்து

இருந்த இடத்தின் பெயரை ஜ்வாலபீடம் அதாவது நெருப்பு பீடம் எனக் கூறுகின்றார்கள். அதன் பின்னர் அவர் 'நாத்' என்ற ஒரு சம்பிரதாயத்தை நிறுவி, மக்களின் அறியாமையை விலக்கி, அவர்களை நல்வழியில் அழைத்துச் செல்ல சித்த யோகி ஒருவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார். அது மட்டும் அல்ல, ஆதிசுன்சனாகிரி என்ற ஸ்ரீ அந்த ஷேத்திரத்தில் தானே பஞ்ச லிங்கமாக, கங்காதீஸ்வரர், சந்திர மௌரீஸ்வரர். மல்லீஸ்வரர், சித்தீஷ்வரர் மற்றும் சோமேஷ்வரர் என்ற பெயரில் வாசம் செய்ய இருப்பதாகத் தெரிவித்தார். அந்த லிங்களில் மூல லிங்கமாக கங்காதீஸ்வரரும், ஆத்மார்த்த லிங்கமாக சந்திர மௌரீஸ்வரரும் இருக்க, அந்த இடம் பஞ்சலிங்க ஷேத்திரம் என்ற பெருமைப் பெற்றது.

அந்த மலை மீது உள்ள இரண்டு ஆலயத்தின் ஒன்றில் உள்ள பெரிய சோமேஸ்வரர் ஆலயத்தில் உள்ள சிவலிங்கமே சோமேஸ்வரர் என அழைக்கப்பட்டுகின்றது. மிகவும் இருட்டான இடத்தில் அமைந்துள்ள அந்த லிங்கத்தை தரிசிக்க பக்தர்கள் விளக்குகளை கொண்டு செல்கின்றனர். மற்றும் ஒரு ஆலயம் கவி கங்காதீஸ்வரர் ஆகும். அங்குள்ள சுமார் பத்து கிலோ எடையுள்ள நந்தியை பக்தர்கள் விஷேசமாகக் கருதி வணங்குகின்றனர். கங்காதீஸ்வரர் ஆலயம் செல்வதற்கு முன்னதாகவே இப்படிப்பட்ட பெருமை நிறைந்த இடத்தில் ஆலயம் அமைத்தது பெரிய ஆச்சரியமான விஷயம் ஆகும். அந்த ஆலயத்தல் ஒரு மூங்கில் தொட்டில் உள்ளது. ஒரு புராணக் கதை இது. முன்னொரு காலத்தில் சுன்சுனாகிரி அருகில் இருந்த நாட்டை ஆண்டுவந்த மன்னனுக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. அவன் தனக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தால் சிவனுக்கு மூங்கிலினால் ஆன தொட்டில் கட்டித் தருவதாக வேண்டிக் கொண்டானாம். சுன்சுனாகிரியில்தான் மூங்கில் புதர் அதிகம் இருந்ததினால் அங்கு சென்று மூங்கிலை வெட்டிக் கொண்டு வருமாறு சேவகர்களை அவர் அனுப்ப அவர்களும் ஒரு மூங்கில் புதரை வெட்டிய பொழுது அதில் இருந்து இரத்தம் வந்ததாம். அப்போது ஒரு அசரி அந்த இடத்தில்தான் சிவபெருமான் தவத்தில் அமர்ந்து கொண்டு இருப்பதாகவும், நடந்துவிட்ட தவறை உடனே சென்று மன்னனிடம் கூறி அங்கு ஆலயம் ஒன்றை அமைக்குமாறு கூறிய பின் திரும்பிப் போன சேவகர்கள் பின்னால் திரும்பிப் பார்க்கக் கூடாது எனவும் ஆணையிட்டதாம். ஆனால் ஆவலினால் அவர்கள் திரும்பிப் பார்த்தவுடன் மரணம்

அடைந்து விழுந்தனராம். ஆந்த ஆலயத்தின் முன் இன்றும் அமைந்துள்ள இரு மனித தலைப்போன்ற சிலை அந்த சேவகர்களாம்.

100 வருடத்திற்கு முன் அமைந்திருந்த காலபைரவர் ஆலயத்தை பாலகங்காதரஸ்வாமி அவர்கள் அற்புதமாக புனர் அமைத்து உள்ளார். காலபைரவர் ஆலயத்தை சுற்றிலும் நூற்றுக்கும் அதிகமான சிவபெருமானின் அவதார உருவங்கள் பதிக்கப்பட்டு உள்ளன. ஆலயத்தின் மிக முக்கியமான அம்சமே காலபைரவருடைய வாகனமான நாய் நந்திக்கு பதிலாக காலபைரவரின் சன்னதியில் நிறுவப்பட்டு உள்ளது. ஆலயத்தில் காலபைரவருடைய அறுபத்தி நான்கு விதவிதமான கோலச் சிலைகள் 4 அடி முதல் 5 அடி உயர அளவில் வைக்கப்பட்டு உள்ளன. அதில் மூலச் சிலையின் உயரம் பதினோறு அடியாகும். ஆலயத்தின் மற்றும் ஒரு சிறப்பு அம்சம் 23 அடி உயர நாகலிங்கேஸ்வரர் ஆகும்.

காலபைரவருக்கு வலப்புறத்தில் அற்புதமான நிலையில் அமர்ந்து உள்ளார். பைரவரின் இடப்புறத்தில் ஸ்தம்பிகா தேவி என்ற ஆலயம் உள்ளது. அங்கு வந்து அவளை வணங்குபவர்களுக்கு பிள்ளையில்லா குறையும், திருமணத் தடைகளும் விலகுவதாக நம்பப்படுகின்றது. சுமார் 275 அடி அகலமும் 175 அடி நீளமும் உள்ள ஆலயத்தில் நான்கு நுழை வாயில்கள் உள்ளன. மூல நுழை வாயில் 100 மீட்டர் உயரத்தில் கட்டப்பட்டு உள்ளது. ஆலய நுழை வாயிலில் உள்ள ராஜகோபுரமும் நூறு அடி உயரமானது.

ஸ்ரீ ஷேத்திர மலை மத்தியில் உள்ள பிந்து சரோவர் இயற்கை ஏற்பட்டது. அந்த நதியின் மேல் பகுதியில், பல அடிகள் உயரத்தில் அமர்ந்து உள்ள கங்காதீஸ்வரருடைய தலை முடியில் இருந்து வெளிவரும் புனித நீரால் அந்த ஓடை நிறம்பியுள்ளது என்ற நம்பிக்கை உள்ளதினால் அங்கு வரும் பக்தர்கள் தங்களுடைய அறியாமையை விலக்கிக் கொள்ளவும் பாவங்களைத் துடைத்துக் கொள்ளவும் அதில் நீராடுகின்றனர்.
அற்புதமான வனப் பிரதேசத்தினால் சூழப்பட்டு உள்ள இடமே ஸ்ரீ ஷேத்திரம் ஆகும். அதை மயூர வனம், அதாவது தன்னை மறந்து தோகை விரித்தாடும் மயிலகள் வாழும் இடம் என்றும் கூறலாம் .